| | |
|---|---|
| **PG-106** | **MAT-21** |

# M.A. DEGREE EXAMINATION – DECEMBER 2018.

## Second Year

## சங்க இலக்கியம்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

1. திருமுருகாற்றுப் படையில் ஆறுமுகங்களின் செயல்களை எழுதுக.

2. முட்டாச் சிறப்பின் பட்டினம் - விளக்குக.

3. நற்றிணை உணர்த்தும் நட்பின் மேன்மையைச் சுட்டுக.

4. நடுகல் வழிபாடு - குறிப்பு வரைக.

5. ‘உண்பது நாழி, உடுப்பவை இரண்டே’ புறநானூறு முன்வைக்கும் விழுமியங்கள் யாவை?

6. பதிற்றுப்பத்து உணர்த்தும் வீரமும் கொடையும் குறித்து எழுதுக.

7. பரிபாடல் உணர்த்தும் பாண்டி நாட்டுச் செய்திகளை எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 10 = 50$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

8. பட்டினப்பாலையின் வழி தமிழரின் அறச் சிந்தனைகளை விவரி.

9. குறுந்தொகையின் உவமைச் சிறப்பை விவரி.

10. ஐங்குறு நூறு முன்வைக்கும் தலைவியின் தனிச்சிறப்புகளை விவரி.

11. புறநானூறு - வீரநிலை இலக்கியம் என்பதை நிறுவுக.

12. பரிபாடலில் திருப்பரங்குன்றமும் முருகனும் குறித்து எழுதுக.

13. கலித்தொகை உணர்த்தும் சங்ககால நிலைமைகளை விவரி.

14. பதிற்றுப்பத்து விவரிக்கும் சேரமன்னர்களின் பேராற்றலை விவரி.

———————

| | |
|---|---|
| **PG-107** | **MAT-22** |

# P.G. DEGREE EXAMINATION – DECEMBER 2018.

## Second Year

### காப்பிய இலக்கியம்

Time : 3 hours                                   Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

1. புராணம் - குறிப்பு வரைக.

2. கோவலனின் பண்புகளை எடுத்துரைக்க.

3. மணிமேகலை காட்டும் இயற்கையிகந்த நிகழ்வுகள் யாவை?

4. சுதஞ்சணன் யார்? அவன் சீவகன் மீது கொண்ட அன்பினைப் புலப்படுத்துக.

5. கும்பகருணனின் செய்ந்நன்றி பாராட்டும் பண்பினை விவரிக்க.

6. அப்பருக்கு, இறையருள் புரிந்த திறத்தை உரைக்க.

7. தேம்பாவணி - குறிப்பு வரைக.

பகுதி ஆ — (5 × 10 = 50 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

8. மதுரையிலும் புகாரிலும் நடந்த நிகழ்வுகளாக மாடலன் கூறுவன யாவை?

9. சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதையில் உரைக்கப்படும் செய்திகள் யாவை?

10. கும்பகருணன் வதைப்படலக் காட்சிகளைத் தொகுத்துரைக்க.

11. அப்பூதியடிகள் திருநாவுக்கரசர் மீது கொண்டிருந்த அன்பினைப் புலப்படுத்துக,

12. கர்ணனின் பண்பின் மேன்மையை உரைக்க.

13. பாலமாட்சிப் படலத்தின் வழி அறியவரும் சூசையின் இயல்புகள் யாவை?

14. ஈமான் கொண்ட படலத்தின் கதைப்போக்கினை விவரி.

———————

| | |
|---|---|
| **PG–108** | **MAT-23** |

M.A. DEGREE EXAMINATION –
DECEMBER 2018.

Second Year

இலக்கணம் : தொல்காப்பியம் - பொருளதிகாரம்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

1. கைக்கிளை, பெருந்திணை - விளக்குக.

2. கற்பெனப்படுவது யாது?

3. அச்சம் என்னும் மெய்ப்பாடு தோன்றுவதற்குரிய நிலைக்களங்கள் எவை?

4. அடிவகைகள் யாவை? விளக்குக.

5. சீர் வகைகள் யாவை?

6. ‘வினையுவமை’ - குறிப்பு வரைக.

7. இளமைப் பருவப்பெயர்கள் எவை?

பகுதி ஆ — (5 × 10 = 50 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

8. அகத்திணை மாந்தர்கள் யாவர்? அவர் தம் செயல்கள் என்ன?

9. பண்டைக்காலப் போர் முறைகள் குறித்துத் தொல்காப்பியம் பகர்வன யாவை?

10. அகத்தில் தோழி பெறுமிடம் குறித்து விளக்குக.

11. கற்பில் தலைவன் கூற்று நிகழ்த்தும் இடங்கள் எவை?

12. அகத்திணைக்குரிய மெய்ப்பாடுகள் எவை?

13. வனப்பு, வண்ணம் குறித்துத் தொல்காப்பியம் கூறுவன யாவை?

14. நால்வருணம் பற்றிய செய்திகளைத் தொல்காப்பியம் வழியில் தெளிவுபடுத்துக.

———————

| PG–109 | MAT–24 |
|---|---|

# PG DEGREE EXAMINATION – DECEMBER, 2018

## Second Year

தமிழிலக்கியம்

ஒப்பிலக்கியம்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு ஒருபக்க அளவில் விடை தருக.

1. ஒப்பாய்வு என்றால் என்ன?
2. ஒப்பாய்வாளரின் தகுதிகள் யாவை?
3. ஒப்பிலக்கியத்தின் இன்றியமையாமை குறித்து எழுதுக.
4. 'செவ்வியல்' – பொருளை வரையறுக்க.
5. கிரேக்கத் தன்னுணர்ச்சிப் பாடல்களைக் குறித்து விளக்கியுரைக்க.
6. 'பிரெஞ்சுக் கோட்பாடு' – உரைப்பது என்ன?
7. ஒப்பீட்டு வகைகள் யாவை?

பகுதி ஆ — (5 × 10 = 50 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

8. ஒப்பியலினால் விளையும் பயன்கள் யாவை?

9. தமிழகத்தில் ஒப்பீட்டாய்வின் வளர்ச்சி நிலை குறித்து விளக்குக.

10. கவிதைகள் குறித்து நிகழ்ந்துள்ள ஒப்பாய்வுகளைப் பற்றி விளக்குக.

11. தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் எவை? அவற்றுள் விளங்கும் செவ்வியல் பண்புகள் குறித்து எடுத்துரைக்க.

12. வடமொழிச் செவ்வியல் இலக்கியங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

13. திரைப்படமாக்கப்பட்ட புதினம் ஒன்றில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து விளக்குக.

14. சங்க இலக்கியங்களில் விளங்கும் உலகப் பொதுமைக் கருத்துக்களை விளக்கியுரைக்க.

---

| PG-110 | MAT-25 |
|---|---|

# M.A. DEGREE EXAMINATION – DECEMBER 2018.

## Second Year

### இலக்கியத் திறனாய்வும் படைப்பிலக்கியமும்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

1. ‘சமுதாய மதிப்புக்கள்’ என்றால் என்ன?

2. ‘படைப்பின் உருவத்தைத் தீர்மானிப்பன உள்ளடக்கமே’ - கூற்றுப் பொருந்துமா?

3. படைப்பாளியின் உளவியல் அவர்தம் படைப்பில் வெளிப்படும் பாங்கைப் புலப்படுத்துக.

4. ‘நனவோடை முறை’ என்றால் என்ன?

5. இலக்கியத்தின் பணிகள் யாவை?

6. ‘இலக்கிய இயக்கங்கள்’ - குறிப்பு வரைக.

7. ‘சாயுமோ கோபுரங்கள்’ - எனும் தலைப்பில் புதுக்கவிதை படைக்க.

பகுதி ஆ — ($5 \times 10 = 50$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

8. திறனாய்வு குறித்து மேலை நாட்டார் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

9. திணைக்கோட்பாடு குறித்து விவரி.

10. காப்பியங்களில் உத்திகளின் பயன்பாட்டு முறையை ஆய்க.

11. திறனாய்வு வகைகள் யாவை? விளக்குக.

12. திறனாய்வு அணுகுமுறை குறித்துக் கட்டுரைக்க.

13. இலக்கியத்தில் கற்பனை பெறுமிடம் குறித்து விளக்குக.

14. 'வீழ்வேனா?' என்ற தலைப்பில் சிறுகதை படைக்க.

———————